பக்கங்கள் 25

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 11 திங்கட்கிழமை 27.11.2023 அதிர்வு 119

## றொஷான் 'அவுட்' ரணில் அதிரடி



ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமை யிலான அமைச்சர வையில் இருந்து 04



# மாவீரர்களை நினைவேந்த துயிலும் இல்லங்கள் தயார்




### துவாரகாவின் உரை

துவாரகா பிரபாகர னின் மாவீரர் தின உரையின் ஒளிபரப்பின் இணைப்பு இன்று பகல் வெளியிடப் பட்டது.

இந்த இணைப்பை அழுத்தி அதனை செவி மடுக்கலாம்.

## தரணியெங்கும் தமிழர்கள் உணர்வெழுச்சி






மாவீரர்களை இன்று மாலை உணர்வு பூர்வமாக நினைவேந்தத் துயிலும் இல் லங்கள் தயார் நிலையில் உள்ளன.

தமிழீழத் தனியரசு அமைப்பதற்காக - தனிநாட்டுக்காக இறுதி மூச்சு வரை போராடி - களமாடி வீரச்சாவைத் தழுவிய வீரமறவர்களை - தவப் புதல்வர்களை - காவல் தெய்வங்களைத் 04

# வடக்கு, கிழக்கில் இன்று மாவீரர்களை நினைவேந்த நீதிமன்றங்கள் அனுமதி

## தடை கோரிய பொலிஸாரின் மனுக்கள் நிராகரிப்பு









(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், கே.வசந்தருபன், சண்முகம் தவசீலன், கனகராசா சரவணபவன், அப்துல்சலாம் யாசீம்)

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு களுக்குத் தடை கோரி வடக்கு, கிழக்கு உள்ள நீதிவான் நீதிமன்றங்களில் பொலி ஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று நிராகரிக்கப்பட்டுள்ளன.

பொதுச் சுகாதாரத்துக்கும், பொது மக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லா மல் உயிழந்தவர்களுக்கான நினை வேந்தல் நிகழ்வுகளை நடத்தலாம் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள் ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப் பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸா ரால் யாழ். நீதவான் 04





# திலீபனுக்கு இன்று அஞ்சலி

மாவீரர் நாளான இன்று அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலேயே ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர். இதன் போது மாவீரர்களுக்கு அக வணக்கம் செலுத்தி தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.








# யாழ். பல்கலை வாசலில் மாவீரர் நாளுக்கு வளைவு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னிட்டு தற்காலிகமான வளைவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகிய நிலையில், ஒவ்வொரு நாளும் பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் இடம்பெற்று வருகிறது.

# யாழ் இந்து அருகே மாவீரர் தின பதாகை






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தை அண்டிய கஸ்தூரியார் வீதி – கல்லூரி வீதி சந்திப்பில் உள்ள சுற்றுவட்டப் பாதையில் மாவீரர் நாள் பதாகையொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

“எம் மாவீரர்களின் தியாக வரலாறு வீண்போகக் கூடாது. ஆகவே விழித்தெழு இளம் தலைமுறையே .. போதை வஸ்துக்களில் இருந்தும், வன்முறை சமூகத்தில் இருந்தும் விழித்தெழுந்து, அறிவாயுதத்தை பயன்படுத்து” என பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள சுற்றுவட்ட பாதையில் ‘மாவீரர் நாள்’ என பதாகை கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடியுடன் மேலும் சில பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி ரணில் எதேச்சதிகாரம்!

## 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்பு கரிசனை

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டில் எதேச்சதிகாரம் அதிகரித்து வருவது குறித்து 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்பு கரிசனை வெளியிட்டுள்ளது.**

**பொதுமக்களின் ஆணையின்றி ஆட்சி புரியும் ஜனாதிபதியின் அதிகரித்துவரும் எதேச்சதிகாரம் குறித்து இலங்கையின் சட்டத்தரணிகள் ஒன்றிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**



பொருளாதார நெருக்கடி குறித்த தீர்ப்பு உட்பட சமீபத்தைய பல நீதிமன்றத் தீர்ப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அரசியல் சாசனத்தால் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் ஆணையை இலகுவாக புறக்கணிக்க முடியாது என சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதியின் அதிகரித்துவரும் ஏதேச்சதிகாரம் குறித்தும் அதனால் நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்தும் வர்த்தக சமூகத்தினரும் சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேச சமூகமும் கருத்தில் கொள்ளவேண்டும் என சட்டத்தரணிகள் ஒன்றிப்பு அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது அரசியல் எழுச்சிக்கு வழிவகுக்கலாம் என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் கூட்டமைப்பு ஜனாதிபதியின் எதேச்சதிகாரத்தை நோக்கிய போக்கு தொடர்ந்தால் பொருளாதார ஸ்திர தன்மை பாதிக்கப்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரசமைப்பு கவுன்ஸிலை அச்சுறுத்தும் ஜனாதிபதியின் சமீபத்தைய முயற்சிகளை சட்டத்தரணிகள் ஒன்றிப்பு அமைப்பு கண்டித்துள்ளது.

நவம்பர் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஒரு எதேச்சதிகார நடவடிக்கையாக அரசமைப்பு கவுன்ஸிலின் நோக்கத்தை திரிவுபடுத்தினார். அரசமைப்பு கவுன்ஸில் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தின் கீழ் வருகின்றது என அவர் தெரிவித்தார் என்று சட்டத்தரணிகள் ஒன்றிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.




# முதல் மாவீரன் சத்தியநாதனுக்கு வல்வெட்டித்துறையில் அஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரர் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதனுக்கு ஈகைச்சுடரேற்றி இன்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர் பண்டிதரின் தாயார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்கள் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வடக்கு, கிழக்கில்...

நீதிமன்றத்திலும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்திலும் , ஊர்காவற்துறைப் பொலிஸாரால் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் இன்று நடைபெற்ற விசாரணைகளை அடுத்து அந்தந்த நீதிமன்றங்களால் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, சுன்னாகம், அச்சுவேலி மற்றும் தெல்லிப்பளை பொலிஸாரால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா – ஈச்சங்குளம் பகுதியில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை விதிக்குமாறு கோரி வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் அந்த நீதிமன்றத்தால் இன்று நிராகரிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த உறவுகளை தகுந்த முறையில் நினைவுகூருவதற்கு எவ்விதமான தடைகளும் இல்லை என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் இன்று கட்டளை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு – மாவடிமுன்மாரி, தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

திருகோணமலையில் மாவீரர்களை நினைவேந்த நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரத்துக்கும் பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லாமல் மாவீரர் நினைவேந்தலை நடத்தலாம் என்று மூதூர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சம்பூர் – ஆலங்குளம் பகுதியில் மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை நீக்குமாறு கோரி மூதூர் நீதிவான் நீதிமன்றில் நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டத்தரணி டி.ரமணனால் இந்த நகர்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் இது தொடர்பில் வாதம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடை கோரி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 7 பொலிஸ் நிலையங்களால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும், மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் கடந்த வாரம் அந்தந்த நீதிமன்றங்கள் நிராகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

“இறந்தவர்களை நினைவு கூருவதைத் தடை செய்ய முடியாது. ஆனால், தடை செய்யப்பட்ட அமைப்பை அல்லது அவர்களை அடையாளப்படுத்தும் கொடி உள்ளிட்ட எதனையும் பயன்படுத்த முடியாது. பொதுச் சுகாதாரத்துக்கும், பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பங்கமில்லாமல் உயிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தலாம்.” – என்று வடக்கு, கிழக்கில் உள்ள நீதிவான் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

## ரொஷான் ‘அவுட்’

ரொஷான் ரணசிங்க வெளியேற்றப்பட்டுள்ளார்.

அவர் வகித்து வந்த விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரம் மற்றும் நீர்ப்பாசனத் துறை போன்ற அமைச்சுகள் பறிக்கப்பட்டுள்ளன.

ரொஷான் ரணசிங்க இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றினார். அதில் தான் கொலை செய்யப்படலாம் எனக் குறிப்பிட்டதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கடும் விமர்சனங்களையும் முன்வைத்திருந்தார்.

அத்துடன், ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரச்சினைக்கு இம்முறை முடியாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் தீர்வு காணப்படும் எனவும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரொஷான் ரணசிங்க பதவி நீக்கப்பட்டுள்ளார்.

## மாவீரர்களை...

தரணியெங்கும் வாழும் தமிழர்கள் உணர்வுடன் பூசிக்கும் மாவீரர் நாள் இன்றாகும்.

மாவீரர்களை நினைவுகூர்வதற்குத் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மக்கள் உணர்வெழுச்சியுடன் தயார் நிலையில் உள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள், விசேட இடங்களில் மாவீரர் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று மாலை 6:05 இற்கு நினைவொலி எழுப்பப்படும். 6:06 இற்கு அகவணக்கம் செலுத்தப்படும். 6.07இற்கு ஈகச்சுடர் ஏற்றப்படும்.








# போதைப்பொருள் வியாபாரி, கான்ஸ்டபிள் உட்பட நான்கு பேர் ஐஸு டன் காத்தான்குடியில் சிக்கினர்!

(கனகராசா சரவணன்)



காத்தான்குடி பிரதேசத்தில் போதை பொருள் மொத்த விற்பனையில் ஈடு பட்டுக் கொண்டிருந்த பிரபல போதை பொருள் வியாபரி மற்றும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற் றிவரும் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் உட்பட 4 பேரை 120 கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தாங்கள் கைது செய்து காத்தான்குடி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து கிழக்கு பிராந்திய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண வின் ஆலோசனைக்கமைய உதவி பொலிஸ்மா அதிபர் என்.பி.லியனகே மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல்.ஏ.எதிர்மன்ன ஆகியோரின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் உதவி பொலிஸ் பரிசோதகர் ஷகி உட்பட்ட குழுவினர் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 3 மணியளவில் காத்தான்குடியில் கராஜ் ஒன்றின் முதலாளியான போதை பொருள் வியாபாரியை 10 கிராம் ஐஸ் போதை பொருளுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து பிரதான வியாபாரியான காத் தான்குடியைச் சேர்ந்த பாயிஸ் என்பவரையும் அவரது உதவியாளர் உட்பட இருவரையும் பகல் 12 மணி யளவில் காத்தான்குடியில் உள்ள வீதி ஒன்றில் வைத்து மடக்கிப் பிடித்த மையுடன், பாயிஸிடம் இருந்து 72 கிராமும் உதவியாளரிடமிருந்து 13 கிராமும் என 85 கிராம் ஐஸ் போதை பொருளை மீட்டனர்.

இதனை தொடர்ந்து பிரதான வியாபாரியான பாயிஸ் இடமிருந்து வியாபாரத்துக்காக போதைபொருளை வாங்கி கொண்டு சென்ற காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற் றிவரும் வவுனியாவைச் சேர்ந்த இளை ஞரான பொலிஸ் கான்ஸ்டபிளிடம் பாயிஸ் ஊடாக பொலிஸார் தொடர்பு கொண்டு போதை பொருளைக் காத் தான்குடிப் பிரதேசத்திலுள்ள இடம் ஒன் றிற்குக் கொண்டுவருமாறு தெரிவிக்கச் செய்தனர். அங்கு மாறு வேடத்தில் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்த பொறியில் சிக்கி சம்பவ இடத்திற்கு பொலிஸ் கான்ஸடபில் ஐஸ் போதை பொருளுடன் சென்ற நிலையில் அங்கு கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்து கைது செய்தமையுடன் அவரிடமிருந்து 25 கிராம் ஐஸ் போதை பொருளை கைப்பற்றினர்.

இதில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக சான்றுப் பொருளான கைப்பற்றப்பட்ட 120 கிராம் ஐஸ் போதை பொருளுடன் காத்தான்குடி பொலிஸாரிடம் தாங்கள் ஒப்படைத்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரி வித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோப்பாய் இராச பாதைப் பகுதியில் மின் கம்பத்தில் திடீரென ஏற்பட்ட தீ



யாழ்ப்பாணம், கோப்பாய் இராச பாதையில் உள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின் கம்பத்துக்கு அருகில் தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் உள்ள மரம் ஒன்றின் கிளைகள் மின்கம்பத்துடன் உரசியதால் நேற்று திடீரென காற்று வீசிய நேரம் மரம் அசையும் போது அப்பகுதியில் மின்ஒழுக்கு ஏற்பட்டு மின்கம்பத்தில் தீ மூண்டது.

எனினும் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் உடனடியாக இலங்கை மின்சார சபையினருக்கு அறிவித்ததன் காரணமாக அனர்த்தம் விரைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது

அந்த மின் மின் கம்பத்தில் ஏற்பட்ட தீயினால் அப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. பிரதான மின் இணைப்பு வயர்கள் சேதமடைந்து பின்னர் இலங்கை மின்சார சபை ஊழியர்களினால் அவை மீள இணைக்கப்பட்டு, மின்விநியோகம் சீர் செய்யப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்,

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## கோட்டா கதியே ரணிலுக்கும்...!

மக்களின் ஆணையை நேரடியாகப் பெற்று அதிகாரத்துக்கு வராமல், நாடாளுமன்றம் மூலம் பின்கதவால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் எதேச்சாதிகாரம் எல்லை மீறுகின்றது என்று சிரேஷ்ட சட்டத்தரணிகளைக் கொண்ட 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்பு தெரிவித்து, அது தொடர்பில் தனது கரிசனையை வெளியிட்டிருக்கின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் அதிகார எல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசமைப்பு உருவாக்கி தந்துள்ள அரசமைப்புக் கவுன்ஸிலையே நிறைவேற்றதிகாரத்தின் - தமது அதிகாரத்தின் - கீழ் வரும் கட்டமைப்பு என்று கூறுவதன் மூலம், தனது நிறைவேற்றதிகாரத்தின் கட்டுமட்டுக்களையும் உடைத்து, எல்லை மீற முயலுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று அபாய எச்சரிக்கை எழுப்பபப்படுகின்றது.

ஜனாதிபதி ரணிலின் அதிகரித்து வரும் எதேச்சாதிகாரத்தின் போக்குக் குறித்து குறித்தும், அதனால் நல்லாட்சி முறைமைக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்தும் அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்குத் தொடர்ந்தால் அது மக்கள் மத்தியில் அரசியல் எழுச்சிக்கு - கிளர்ச்சிக்கு - வழிவகுக்கும், பொருளாதார ஸ்திரத்தன்மையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றெல்லாம் அந்த அமைப்பு சுட்டிக்காட்டி உள்ளது.

அரசமைப்புக் கவுன்ஸில் தனது நிறைவேற்றதிகாரத்தின் கீழ் வருவது என்ற ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை மிகவும் ஆபத்தான கருத்து. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான இந்தக் கட்டமைப்பு தனக்குக் கீழ் வருகின்றது என்ற கூற்று ஜனாதிபதியின் எதேச்சாதிகாரத்துக்கு - சர்வாதிகாரத்துக்கு - கட்டியம் கூறும் கருத்து என்று சுட்டப்படுகிறது.

ஜனாதிபதி மேற்கொள்ளும் நியமனங்களை கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துவது அரசமைப்பு கவுன்ஸிலின் பிரதான பணி. தான் பிரேரித்த நியமனங்களை அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகரிக்க மறுத்தமைக்காக அதை அச்சுறுத்தும் விதத்தில், அந்தக் கவுன்ஸிலின் செயற்பாடுகள் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்க போகின்றார் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு, தனது பதவி நிலையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் அரசமைப்பு ஏற்பாடுகளை - அரசமைப்புப் பொறிமுறைகளை - அவரே உடைத்தெறிய முயலும் ஜனநாயக விரோத போக்கு என்பது வெளிப்படையான உண்மை.

ஜனாதிபதி பரிந்துரை செய்யும் நியமனங்கள் தொடர்பில் சுதந்திரமாக - சுயாதீனமாக - முடிவுகளை எடுக்கும் தற்றுணிவு அரசமைப்பு கவுன்ஸிலுக்கு உண்டு. அதுதான் அதன் கடமை. பொறுப்பு. பணி.

அதனை ஜனாதிபதி கேள்விக்கு உட்படுத்த முடியாது. அதனைச் செய்யவிடாமல் நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி, அதன் மீது அழுத்தம் கொடுத்து, அதைக் கட்டுப்படுத்தி, அடக்க ஜனாதிபதி முயல்வது முழு அளவிலான எதேச்சாதிகாரத்துக்கே வழிவகுக்கும்.

நிறைவேற்றதிகாரத்தின் எதேச்சாதிகாரம் எல்லை மீறியமையால்தான் - கட்டுமட்டில்லாமல், வழிவகை தெரியாமல், அது பிரயோகிக்கப்பட்டமையால்தான் - நாடு மோசமன பொருளாதார நெருக்கடிக்குள்ளும், பல்வேறு சிக்கல்களுக்குள்ளும் மாட்டியது. 'அறகலய' போன்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் வெடித்தமை கூட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அல்ல, அவர் கையாண்ட எல்லை மீறிய எதேச்சாதிகாரத்துக்கு எதிராகத்தான் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறந்துவிடக்கூடாது.

தனக்குக் கிடைத்த குறுகிய கால ஆட்சிக்குள் - அடுத்த 11 மாதங்களுக்குள் - எதேச்சாதிகாரப் போக்கை நோக்கி தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்க நகர்வாராயின் கோட்டபாயவின் கதியே ரணிலுக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# வவுனியாவில் யானையின் சடலம் மீட்பு



வவுனியா, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் யானை ஒன்றின் சடலம் இன்று மீட்கப்பட்டது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள காணியொன்றில் யானையின் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் இது தொடர்பில் ஒமந்தை பொலிஸார் மற்றும் கிராம சேவையாளருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் சடலத்தை பார்வையிட்டமையுடன், வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியிருந்தனர். இந்த யானை மூன்று நாள்களுக்கு முன்பாகவே உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

கௌதம புத்தர்







# யாழ். வேம்படி மாணவிகள் கர்நாடக சங்கீதத்தில் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழி தின போட்டியில் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுக் கொண்டது.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற போட்டியில் குழு இசையில் இந்த மாணவிகள் குழுவுக்கு நெறியாள்கையை ஆசிரியைகளான திருமதி சுபதர்சினி சோதீருபன், திருமதி கவிதா ஜெகானந்தன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய லக்ஷானி பன்னீர்ச்செல்வன், அபிராமி சசிகரன் , வரேண்யா ஶ்ரீரங்கநாதன், சாகித்தியா சிவகுமார், ரதுஜா திருநீலகண்டன், இலக்கியா கருணாநிதி, பார்கவி செல்வானந்தராசா, டஸ்வினி கணேந்திரா, டிவைனி பிரபாகரன், அனந்தவைகரி ஜனார்த்தனன் ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.




# நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு ரோட்டரி கழகத்தின் அனுசரணையில் அம்பாறை பொலிஸார், அம்பாறை வலயக் கல்வி அலுவலகம் மற்றும் அம்பாறை பொது வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்திருந்த விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம் அம்பாறை சுற்று வட்டாரத்தில் இடம் பெற்றது.

நீரிழிவு நோயின் தாக்கம், பரிகாரம், நோயைத் தவிர்ப்பதற்கான உபாயம் மற்றும் உணவுப் பழக்க வழக்கங்கள் சம்பந்தமாக பொது மக்களை விழிப்பணர்வூட்டுவதாக இந்த சைக்கிள் ஓட்டம் அமைந்திருந்தது.

இந்த சைக்கிள் சவாரியில் பொலிஸ் உத்தியோஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் என பலரும் பங்கேற்றனர்.







# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கு உதவி!

(பழுவூரான்)

அண்மையில் வெளியாகிய 5 ஆம் ஆண்டு புலமை பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு, ரணில் 24 செயலணியின் தலைவர் கணபதிப் பிள்ளை மோகனின் வழிகாட்டலின் கீழ், 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இந்தப் பரீட்சையில் சித்தி பெற்றுப் பொருளாதார ரீதியில் பின்தங்கிய 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



# மட்டக்குளி மாணவர்களுக்கு போதை ஒழிப்புப் பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு, மட்டக்குளி ஹம்சா கல்லூரி மாணவர்களுக்கு ஜனனம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் போதை ஒழிப்பு பயிற்சிப் பாட்டறை ஒன்று இடம் பெற்றுள்ளது.

கலாநிதி ஜனகனின் எண்ணக் கருவில் உருவான ஜனனம் அறக்கட்டளையின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" செயற்றிட்டத்தின் கீழ் "போதையற்ற இளம் சமூகத்தினரை உருவாக்குவோம் "என்ற தொனிப்பொருளில் இது இடம்பெற்றது.

கொழும்பு மட்டக்குளி ஹம்சா கல்லூரியை சேர்ந்த தரம் 10,11 ஆகிய பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்குபோதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வூட்டும் ஒரு நாள் பயிற்சிப்பாட்டறை கல்லூரி வளாகத்தில் பிரதி அதிபர் ஆர்.கனக சந்திரிகா தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப்பாட்டறையில் வளவாளர்களாக ஆயிஷா ஹசன், அஸ்ரா இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பயிற்சிப்பாட்டறையில் பங்கு பற்றிய பாடசாலை மாணவர்களுக்கு ஜனனம் அறக்கட்டளையின் தலைவரும் ஐ. டி. எம். நேசன் சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளருமான கலாநிதி வி.ஜனகன் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஐ. டி. எம். நேசன் சர்வதேச கல்வி நிறுவனத்தின் வியாபார மேம்பாட்டு முகாமையாளர் றிஸ்கான் முகம்மட் மற்றும் பாடசாலையைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன் முதற்கட்டமாகக் களுவாஞ்சிக்குடி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் சித்தியடைந்த 12 மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப் பட்டன.



# சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை, கிண்ணியா மத்திய கல்லூரி உயர்தர உயிரியல் விஞ்ஞான மாணவன் எம்.ஆர்.எம்.பஹீஜ் அல் பராஹ் தேசிய விஞ்ஞான மன்றம் நடத்திய சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

சீனாவில் இடம்பெற்ற சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி உயர்தர உயிரியல் மாணவன் எம்.ஆர்.எம்.பஹீஜ் அல் பராஹ் குழு ரீதியிலான ஆய்வில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளார்.



இந்தச் சாதனை மாணவனைக் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் பெற்றோருடன் பணிமனைக்கு வரவழைத்துப் பாராட்டி கௌரவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் சாதனை மாணவன், பெற்றோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்விப் பணிமனை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



## றக்கா வீதி மைதானத்தில் மரம் நடுகை

யாழ்ப்பாணம் றக்கா வீதி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மருதடி கிராம சேவகர், மருதடி முதியோர் சங்கப் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர் தி. மைக்கல் ஆகியோர் கலந்து கொண்டு மரங்களை நட்டு வைத்தனர்.

## மாணவர்களை வலுவூட்டும் காலநிலை மாற்றப் பட்டறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆற்றல் மிக்க தலைமைத்துவத்தை உருவாக்கி பிரகாசமாக ஒளிரும் மாணவர் மனங்களில் சுற்றுச் சூழல் பொறுப்புணர்வுகளை விதைத்து எதிர்கால தலைவர்களுக்கு வலுவூட்டும் காலநிலை மாற்றப் பட்டறை ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா யுனைட்ஸ் நுவரெலியா நல்லிணக்க மையம் மவுஸாக்கல தமிழ் மகா வித்தியாலயத்தில் இந்தப் பட்டறையை ஒழுங்கு செய்திருந்தது.

எதிர்காலத் தலைவர்களான மாணவர்களுக்கு வலுவூட்டும் வகையில் காலநிலை மாற்ற பட்டறை இடம்பெற்றது.










# ஆளுமைகளின் அடையாளம் 50 எழுத்து எனும் நூல் வெளியீடு!

(எம்.எப்.எம்.நவாஸ்)

ஆளுமைகளின் அடையாளம் 50 எழுத்து எனும் நூல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

பாவேந்தல் பாலமுனை பாரூக் எழுதிய நூல் வெளியீடு நேற்று முன் தினம் (25) அட்டாளைச்சேனை பிரதேச கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் தலைமை இடம்பெற்றது .

இந்த நூலில் 50 இலக்கிய ஆளுமைகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் போன்ற துறை சார்ந்தவர்களின் ஆளுமைகள் பற்றித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.நவநீதன், தென் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ரமிஸ் அப்துல்லா மற்றும் அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம்.ஹனிபா , கல்முனை பிரதேச செயலாளர் டீ.அதிசயராஜ் மற்றும் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பல்துறை சார்ந்தவர்கள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# தேசியமட்ட தமிழ் தினப் போட்டியில் உவர்மலை விவேகானந்தா பிரகாசிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அனுராதபுரத்தில் நடத்தப்பட்ட அகில இலங்கை தேசியமட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் திருகோணமலை , உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவிகள் பிரகாசிப்பு.

அகில இலங்கை தமிழ்மொழித்தின தேசிய மட்ட குழு இசை திறந்த போட்டியில் இரண்டாம் இடத்தையும், குழு இசை இருபாலாருக்குமான போட்டியில் மூன்றாம் இடத்தையும், தனி இசை வர்ணம் என்.சதுர்சனா மூன்றாம் இடத்தையும், தனி நடனத்தில் இரண்டாம் இடத்தையும், குழு நடனத்தில் இரண்டாம் இடத்தையும் உவர்மலை விவேகானந்த கல்லூரி மாணவிகள் பெற்றுக் கொண்டனர்.



# 34 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் 34 வருட காலமாக சேவையாற்றிய கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பதில் அதிபர் எஸ்.எச் ஹுசைன்தீன் (பாசர்) இன்று (27) தனது ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.



பாடசாலையின் பழைய மாணவனாகிய இவர் அதே பாடசாலையில் ஆசிரியராக, பிரதி அதிபராக, உதவி அதிபராக, பதில் அதிபராக 34 வருடங்கள் சேவையாற்றியுள்ளார்.

கற்பிட்டி அல் அக்ஸா வில் தனது க.பொ.த உயர்தர பரீட்சையை எழுதிய பின்னர் அல் அக்ஸாவின் தேவையைக் கருதி தொண்டர் ஆசிரியராக சேவையாற்றிய பின்னர் கற்பிட்டி பிரதேச சபையில் சிறிது காலம் கடமைபுரிந்தார்.

1989 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆசிரியர் நியமனம் பெற்று தனது முதல் ஆசிரியர் சேவையை கற்பிட்டி நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பித்தார்.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி முதல் தான் கல்வி கற்ற கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலைக்கு இடம்மாற்றம் பெற்று வந்து சமூகக் கல்வியும் வரலாறும் பாட ஆசிரியராகவும் உயர்தர பிரிவுக்கு அரசறிவியல் பாட ஆசிரியராகவும் சேவையாற்றினார்.

கற்பிட்டியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப பாடசாலையான அல் ஹீரா பாடசாலை உத்தியோக பூர்மாக ஆக்கப்பட்டு புதிய அதிபர் வரும் வரை அல் அக்ஸா தேசிய பாடசாலையின் ஊடாக இணைப்பு செய்யப்பட்டு அப்பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று செயற்பட்டவர்.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபராகக் கடமைப் பொறுப்பேற்று சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் சேவையாற்றியவர். அத்தோடு அல் அக்ஸா தேசிய பாடசாலையில் அதிபர் இல்லாத சிறிது காலம் பதில் அதிபராகவும் அவர் சேவையாற்றினார்.



# சிறந்ததொழில் முயற்சியாளர் விருது; காத்தான்குடிக்கு இரண்டு விருதுகள்!

(கே. எ. ஹமீட் )

இலங்கை சாதனை மன்றத்தின் விருது வழங்கல் விழாவில் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான கௌரவத்தில் காத்தான்குடிக்கு இரண்டு விருதுகள் கிடைத்துள்ளன.

ஜனாதிபதி விருதுபெற்ற பஹிமா சுக்ரிக்கு சிறந்த தொழில் முயற்சியாளருக்கான மற்றுமொரு விருது கிடைத்துள்ளது.

அல்ட்ரா அலுமினியம் பிறைவட் லிமிடட் நிறுவனத்தின் தவிசாளர் உணைஸ் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை சாதனை மன்றம் நடத்திய விருது வழங்கல் விழா கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றது. பல்துறைகளில் உள்ள சாதனையாளர்கள் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

கைத்தொழில் அதிகார சபையின் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் நா.கோகுலதாஸின் வழிகாட்டலில் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

காத்தான்குடியை சேர்ந்த பஹிமா சுக்ரி (எஸ்எவ் மொடலிங் ரூ கார்மண்ட்) மற்றும் அக்பர் முஹம்மட் உனைஸ் (அல்ட்ரா அலுமினியம் பிறைவட் லிமிடெட் நிறுவனம்) ஆகிய இரண்டு நிறுவனங்களும் தெரிவு செய்யப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டன.

இவ் விழாவில் மருத்துவம், புத்தாக்கம், பொலிஸ் சேவையில் பெண் அதிகாரியின் அதி உச்ச கடமை என பல்துறைகளில் உள்ள ஆளுமைகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.








# முஸ்லிம் காங்கிரஸைப் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

கட்சியின் நலன் கருதி கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து கிராம மட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும்.

முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் உறுப்பினர் ஏ.பீ.நவாஸ் தலைமையில் சாலம்பக் கேணி பிரதேசத்தில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புணரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

நமது கட்சிச் செயற்பாட்டாளர்களிடம் பல்வேறு எதிர்பார்புக்கள் இருக்கலாம். தற்போதைய சூழ் நிலையில் நமது கட்சியின் எழுச்சிக்கும்,வளர்ச்சிக்கும் நாம் பெரும் பங்களிப்பு செய்ய வேண்டிய கால கட்டத்தில் உள்ளோம். கட்சியை நாம் பலப்படுத்தும் போது தான் நாமும் நமது சமூகமும் நன்மை அடையக் கூடிய நிலைமை ஏற்படும்.

ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றும் நோக்குடன் சஃரான் குழுவினரை பயன்படுத்தி குண்டு வெடிப்பு சம்பவத்தை திட்டமிட்டு மேற்கொண்டனர். நமது நாட்டில் வாழும் முஸ்லீம்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று காட்டுவதற்கு சில அரசியல் தலைவர்களும், இனவாதிகளும் பாரிய முயற்சிகளை மேற்கொண்டனர். பெரும்பான்மை மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பான தவறான எண்ணங்களையும் பரப்பினர்.

அமைச்சர் நிஸாட் பதியுதீன் அமைச்சர் பதவியில் இருந்து இராஜினமா செய்ய வேண்டும், கிழக்கு மாகாண ஆளுனர் ஹிஸ்புல்லாஹ் ஆளுநர் பதவியில் இருந்து இராஜினமா செய்ய வேண்டும், மேல் மாகாண ஆளுனர் அஸாத் சாலி ஆளுநர் பதவியில் இருந்து இராஜினமா செய்ய வேண்டும் என கோரி ஆயிர கணக்கான பௌத்த மத தேரர்களும், இனவாத குழுக்களும் ஒன்றிணைந்து கண்டியில் இருந்து கொழும்பை நோக்கி பாதை யாத்திரை செல்வதற்கு தயார் நிலையில் இருந்தனர்.

இந்த பாதை யாத்திரைக்கு பின்னால் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு இருந்தன. இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகள் எனக் காட்டி, பெரும்பான்மை மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பாரிய விரிசல்களை ஏற்படுத்தி வந்தனர். முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம்களது வீடுகள் பாதுகாப்பு படையினர்களால் பரிசோதிக்கப்பட்டன.

முஸ்லிம்களின் வீடுகளில் கூட சமைப்பதற்கு பாவிக்கப்படும் சிறிய கத்திகளை கூட வைத்திருக்க முடியாத சூழ் நிலை ஏற்பட்டது.

இனவாத செயற்பாடுகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு முஸ்லிம் சமூகத்திடம் இருந்த ஒரே ஒரு ஆயுதமாக அரசியல் அதிகாரத்தை பாவிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் தலைமையில் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் தாங்கள் வகித்து வந்த அமைச்சு பதவிகள் அனைத்தையும் சமூக நலன் கருதி ராஜினமா செய்வதாக தீர்மானித்து சகல அமைச்சு பதவிகளில் இருந்து முஸ்லிம் அமைச்சர்கள் ராஜினமா செய்தார்கள்.

இந் நிகழ்வு நடை பெறவிட்டால் நமது நாட்டில் நமது முஸ்லிம் சமூகம் இன்றுவரை அச்சம் அடைந்த நிலையில் வாழும் நிலமை தொடர்ந்திருக்கும் என்பதை நாம் மறந்து விட முடியாது.

நமது சமூகத்தின் பாதுகாப்புக்காக நமது மக்கள் பிரநிதிகளின் பலத்தை அன்று பாவித்தோம். இந் நிகழ்வு நமது நாட்டின் வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

எனவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை பலப்படுத்துவதன் ஊடாக முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்புக்கும், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குப் பலமாகவும் அமையும் .- என்றார்.

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



# சினிமா மோகத்தில் இருந்து விடுபடுங்கள்!

(ந.லோகதயாளன்)

வடக்கில் இளைஞர்கள் சினிமா மோகத்தில் கையில் வாள்களுடன் அலைந்து திரிவதை பார்க்கும் போது நெஞ்சம் கனக்கின்றது. சினிமா மோகத்தில் இருந்து எமது சமூகம் விடுபட வேண்டும். இதுவே எனது கோரிக்கை.

இவ்வாறு ஆறு திருமுறுகன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்



## கோரிக்கை விடுக்கிறார் ஆறு திருமுருகன்

தெரிவித்துள்ளவை வருமாறு–

இன்று சினிமாவில் பைத்தியங்கள் பிடித்தவர்கள் போல் நடிகர்களுக்கு பால் அபிஷேகம் செய்வதும், சிலர் நடிகர்களின் படங்களை தங்களது சட்டைப் பையில் கொண்டு திரிவதும் மன வேதனையைத் தருகின்றது.

இந்தகைய காட்சிகளை பார்க்கின்ற போது வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது. யாரும் எதிர்பார்த்திராத ஒரு சமூக மாற்றம் எமது மண்ணில் தோன்றி விட்டது என்ற ஆதங்கம் மனதில் தோன்றிக் கவலை தருகின்றது.

சினிமா என்பது ஒரு கலை வடிவம். அதனை முற்று முழுவதுமாக கூடாது என்று சொல்லுகின்ற தகுதி எனக்குக் கிடையாது. நல்ல தயாரிப்பாளர்கள், நல்ல கதைகள், நல்ல சிந்தனைக்கு விருந்தான காட்சிகள், வெறும் 3 மணத்தியாலங்களுக்குள் இந்த உலகத்துக்கு நல்ல கதைகளைச' சொல்லுகின்ற சினிமாக்களும் உள்ளன.

ஆனால் சினிமாவில் பாத்திரங்களாக வந்துவிட்டுப் போகின்றவர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வில் பத்திரமாக வாழ்கின்றார்கள் என்று அபிப்பிராயம் கொள்வது பெரும் தவறு.

இந்திய சினிமா நட்சத்திரங்கள் பற்றி நான் சிறு வயது தொடக்கம் வாசித்து கொண்டு இருக்கின்றேன். திரையில் வருகின்ற கதா நாயகர்கள் எல்லோரும் தங்கள் வாழ்வில் இராமனாக, சீதையாக அல்லது அரிச்சந்திரனாக அவர்கள் நடித்திருக்கலாமே அல்லாமல் அவர்கள் தங்கள் வாழ்வில் வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை.

இவர்களைப் பார்த்து ஏமாந்து விடுகின்ற இளைய சமூகம் இந்தியாவில் இருந்தது. இந்திய மாநிலங்களில் கேரள மாநிலம் 96 வீதம் கல்வியறிவு பெற்று உயர்ந்த நிலையில் இருக்கின்ற பொழுது, தமிழ்நாட்டில் இந்தச் சினிமா பாதிப்புக்கள் இன்றும் உள்ளன.

தமது சிறு வயதிலே பாடசாலைக்கு செல்லாதவர்கள் கூட அங்கு உள்ளார்கள், பலர் வறுமையிலே வாடுகின்றார்கள்.

தமிழ்நாட்டில் கல்வியறிவு குறைந்தவர்கள் மத்தியில் இந்தச் சினிமா மோகமானது வேகம் கொண்டு இந்த சினிமாவில் நடிப்பவர்களைக் கடவுளாக உயர்த்திப் போற்றும் நிலை உருவாகி அவர்கள் இந்த நடிகர்களுக்காகச் சங்கங்கள் அமைத்துள்ளார்கள்.

ஒரு காலத்தில் தமிழுக்குச் சங்கம் அமைத்து, முத்தமிழுக்குச் சங்கம் அமைத்து மதுரை தமிழ் சங்கம் என்றும் சென்னை தமிழ் சங்கம் என்றும் சங்கங்கள் அமைத்து தமிழை போற்றிக் காத்த தமிழர் பண்பாட்டுக்கு அப்பால், நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் சங்கம் அமைத்து அதற்குத் தலைவர் என்றும் செயலாளர் என்றும் தேர்தல் நடத்தும் அவலம் அங்கு நடைபெறுகின்ற செய்திகளை பத்திரிகைகளிலே பார்க்கின்ற பொழுது எமது மண்ணை நினைத்து சற்று ஆறுதலாக இருக்கிறது.

எங்கள் மண்ணில் சினிமா நாயகர்களுக்கு யாருமே சங்கம் அமைக்கவில்லை. சினிமா நாயகர்களை யாரும் வீட்டில் படமாக வைக்கவில்லை. சினிமா நாயகர்களின் படங்களை பொறித்த உடைகளை யாருமே அணிந்து செல்லவில்லை.

நிதானமானர்கள் எல்லோரும் எங்கள் மண்ணில் வாழ்கின்றார்கள் என்று நான் தமிழ் நாட்டுக்குச் செல்லும் பொழுதுகளில் நினைத்து ஆறுதல் அடைந்தேன்.

என்ன பரிதாபம்?.. போருக்கு பின்பு ஏற்பட்ட மாற்றங்களின் விளைவு இன்று எதிர்பாரத விதமாக எங்கள் மண்ணில் இந்தப் போலித்தனமான சினிமாவின் சாயல்கள் அவர்களின் உள்ளங்களில் ஊறி இருக்கின்றது.

இதன் காரணமாகத்தான் நிதானம் கெட்ட செயற்பாடுகள் எமது மண்ணில் நடைபெறுகின்றன.

அன்புக்குரிய மாணவர்களே, உங்களுடைய கைப் பையில் ஒரு விஞ்ஞானியின் படம் இருக்கலாம், ஒரு மெய்ஞானியின் படம் இருக்கலாம், பெற்றவர்களின் படம் இருக்காலம். ஆனால் நடிகர்களின் படங்களை நீங்கள் சுமப்பீர்களானால் நீங்கள் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் அல்ல.

அன்பு குழந்தைகளே அப்படி ஏதாவது சினிமாப் படங்களை நீங்கள் வைத்திருந்தால் அவற்றை இன்றே அப்புறப்படுத்தி விடுங்கள்.

இந்தச் சினிமா நடிகர்கள் வெறும் பணத்துக்காக நடிக்கின்றார்கள். சினிமா

(15ஆம் பக்கம் பார்க்க)

# சினிமா மோகத்தில் இருந்து விடுபடுங்கள்!

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோகத்தில் தமிழர்கள் ஊறி அழிகின்றார்கள் என்பதை உணர்ந்து வேறு பல மாநிலங்களில் இருந்து வந்து தமிழ் நாட்டிலே படம் நடிக்கின்றார்கள்.

பலபேருக்குத் தமிழ் மொழியே தெரியாது. படம் நடித்து பெரிய கதாநாயகர்களாகக் கொண்டாடுகின்ற பலருக்கு தமிழ் மொழியே தெரியாது.

தமிழர்களே பல கோடிகளை செலவு செய்து படம் எடுக்கின்றார்கள். தமிழர்களே நாயகன் நாயகிகளை கொண்டாடுகின்றார்கள். ஆனால் அவர்களுக்குத் தமிழ் தெரியாது.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் தமிழன் ஏமாறுகின்றானே.

அன்புக்குரிய மாணவர்களே சினிமாவில் வருகின்ற நுட்பங்கள் அனைத்தும் எமக்கு அப்பாற்பட்டவை. இவை அனைத்தும் தொழில் நுட்பத்தால் உருவாக்கப்பட்டவை.

மிகப் பெரிய உயரத்தில் இருந்து குதிக்கும் கதாநாயகன் எந்த காயமும் இல்லாமல் தப்புகின்றான் என்று கனவு காண வேண்டாம்.

சம தரையில் ஓடுகின்ற நீங்கள் விழுந்தாலே காயம் ஏற்படுகின்றது. ஆனால் மலையில் இருந்து விழுந்து, எழுந்து நாயகன் 10 பேரை அடித்து வீழ்த்துகின்றான் என்றால் இந்த 21 ஆம் நூற்றாண்டில் என்ன வேடிக்கை?

ஆற்றல் உள்ள மாணவர்கள் இது தொழில்நுட்பத்தின் கெட்டித்தனம் என்று நன்றாக ரசிக்கலாம். ஆனால் அது கதாநாயகனின் கெட்டித்தனம் என்று ரசிப்பதுதான் பெரும் ஆபத்து ஆகும்.

இன்று எமது மண்ணில் பல இளைஞர்கள் கையில் வாள்களுடன் திரிகின்றார்கள். சினிமா காட்சிகளிலே உள்ளது போல அவர்கள் வாள்களை கையில் எடுத்துத் தெருக்களில் சண்டை பிடிக்கின்றார்கள்.

யாழ். போதனா வைத்தியசாலையிலே மருத்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இவ்வாறான சூழலில் ஒவ்வொருமாதமும்வைத்தியசாலையில் படுக்கையில் கிடக்கும் இளைஞர்களைப் போய் பாருங்கள்.

இவர்களுக்கு மூலம் என்ன?. சினிமாதான்.

சினிமாவில் காட்டும் வாள்கள் அனைத்தும் போலியானவை. வாள்களுடன் சட்டை போடும் காட்சிகளில் சினிமா கதாநாயகனின் முகத்தை வைத்து தொழில்நுட்பம் மூலம் காட்சிகளைதம் தயார் செய்கின்றார்கள்.

ஆனால் பல இளைஞர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால், எங்களுடைய கதா நாயகன் நன்றாக வாள் வீசுகின்றான் என்று.

அன்புக் குழந்தைகளே, இந்த சினிமா போலித்தனங்களில் நீங்கள் அகப்பட்டு விடக்கூடாது. நன்மைகளை செய்த சினிமா இன்று கெடுதல்களை உருவாக்குகின்றது.

வயதுக்கு மூத்தவர்களை ஏளனம் செய்வது, பொருளைத் திருடுவதற்காக கொலை செய்வது போன்ற இன்றைய இளைஞர்களின் நடத்தைகள் எல்லாம் தற்கால சினிமாவில் காட்டியவைதான்.

எமது மண்ணில் இன்றைய திருடர்கள் எங்கே இருந்து கற்றார்கள்? சினிமாவிலே சில காட்சிகளை அவ்வாறு காட்டி விட்டு போய்விடார்கள்.

பணம் தேவை என்றவுடன் சினிமாவிலே கற்றதை கையாளுகின்றார்கள். ஒரு காலத்தில் ஆங்கில படங்களிலே மட்டும் காட்டுகின்ற காட்சிகளை தற்காலத்தில் தமிழ் சினிமா காட்சிகளிலே காட்டுகின்றார்கள்.

இன்று எங்கள் மண்ணில் சினிமாவில் பார்த்து விட்டு எத்தனை கொடுமைகள் நடைபெறுகின்றன. ஒரு இரக்கமற்ற ஒரு சமூகத்தை நாங்கள் எங்கள் மண்ணில் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

சினிமாவில்தான் பொருள்களைக் கடத்துகின்ற நுட்பங்களை காட்டிக் கொடுத்தார்கள். இன்று வடக்கில் இந்தளவு போதைப் பொருள்களைக் கடத்துகின்றார்கள் என்றால் அது சினிமா கற்று தந்த தந்திரங்கள்தான்.

இன்று எமது மண்ணில் போதைகளைக் கடத்துபவர்கள் ஒரு பெரிய நிறுவனத்தின் அதிபதி போல சிறப்பான தோற்றத்துடன் திரிகின்றார்கள். யாரும் இவர்களை எளிதில் அடையாளம் காண முடியாத அளவுக்குத் திரிகின்றார்கள்.

சினிமாவிலே வரும் காட்சிகளை பார்த்து தத்தம் தேவைகளுக்கு அவற்றை பயன்படுத்துகின்றார்கள்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் நிமிர்ந்து நின்றது. யாருக்கும் அஞ்சாது சின்றது, நிதானமாகத்தான் எந்த ஒன்றையும் செய்யும். ஒரு காலத்தில் 5 சதம் செலவு செய்வது என்றாலும் வீணாகச் செலவு செய்ய மாட்டர்கள்.

ஒரு காலத்தில் வடக்கினுடைய பொருளாதார வலுமையை ஏனையவர்கள் பெருமையுடன் பேசினார்கள்.

இந்த பண்பாட்டுக்கு ஆபத்து வரக்கூடிய ஆடம்பரமான செலவீனங்கள் எமது மண்ணில் தொடங்கி விட்டன. சினிமா மோகம் பலர் வாழ்வில் குடி கொண்டுள்ளது. திருமண வீட்டில் ஒரு பெண்ணை அலங்கரிப்பதற்கு பல லட்சங்களைச் செலவு செய்கின்றார்கள்.

எங்கள் மண்ணில் பல பெண்கள் தமிழுக்காக வாழ்ந்து உயிர் துறந்த பண்பாட்டில் இன்று எங்கள் தமிழ் பெண்கள் ஆந்திரா வடிவமைப்பு, கேரளா வடிமைப்பு என்று கூறிக் கொண்டு அலங்கரிக்கின்றார்கள்.

எங்கள் பண்பாட்டுக்கு அப்பால் பெண்களை அலங்கரிப்பதெல்லாம் எங்கள் தமிழ் பண்பாட்டுக்குச் செய்யும் பொரும் துரோகம் ஆகும்.

இந்த ஒப்பனை பெண் கலைஞர்களை எங்கள் மண்ணில் உருவாக்கியிருப்பது இந்த சினிமாதான். இந்த ஒப்பனைகளைப் பார்த்துவிட்டுச் சிலர் அழகாக இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் இது பெரும் ஆபத்து. எங்கள் பண்பாட்டைக் குழி தோண்டிப் புதைக்கும் ஆபத்து.

எத்தனை நூற்றாண்டுகள் பழமையான வரலாறைக் கொண்ட எங்கள் மண்ணுக்கு இந்த சினிமா கதா நாயகிகளைப் பார்த்து பார்த்து பெண்கள் எல்லோரும் திசை மாறிச் செல்கின்றார்கள்.

அன்புக் குழந்தைகளே, இந்தப் போலித்தனமான வலையில் நீங்கள் அகப்பட்டு விடாதீர்கள்.

சினிமா நடிகர்கள் கோடிக் கனக்கில் பணம் சம்பாதிக்கின்றார்கள். ஆனால் ஒரு ஏழைக்கு கொடுக்க மாட்டர்கள்.

சினிமாவிலே கோடிக் கனக்கில் உழைத்து தள்ளுகின்ற கதாநாயகர்கள் நினைத்திருந்தால் எத்தனையோ ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கலாம். பல தர்ம காரியங்கள் செய்திருக்கலாம்.

கோடிகளை சம்பளமாக பெற்றுக் கொள்ளும்நடிகர்கள்நினைத்திருந்தால் தெருக்களிலும், மரங்களுக்கு அடியிலும், ரயில் தண்டபாளங்களின் அருகிலும் வாழும் ஏழைகளுக்கு உதவி செய்திருக்கலாம்.

சினிமாவில் தங்களை ஏழைகளின் பங்காளன் என வீர வசனங்களை பேசபவர்கள் சுய வாழ்விலே ஒரு ஏழையின் வாழ்வில் ஒரு சுபீட்சத்தை ஏற்படுத்த மாட்டார்கள்.

சினிமாவில் ஏழைகளின் பங்காளன் என்றும் அநியாயங்களை எதிர்ப்பவர்கள் போலவும் இளைஞர்களின் மனங்களில் குடி கொள்ளும் சினிமா நடிகர்கள் நிய வாழ்விலே தாம் சார்ந்த சமூகங்களிற்கு ஏதுவும் செய்வதில்லை.

முன்பு பல நடிகர்கள் தர்மங்கள் செய்திருகின்றார்கள். ஆனால் தற்காலத்தில் 90 வீதனமா நடிகர்கள் நடிகைகள் தர்மம் செய்வதில்லை.

எனவே அன்பு குழந்தைகளே

(16ஆம் பக்கம் பார்க்க)

# சினிமா மோகத்தில் இருந்து விடுபடுங்கள்!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

போலியான இந்த சினிமா காட்சிகளை பார்த்து ஏமாந்து விடாதீர்கள். இன்று எங்கள் மண்ணில் பலர் பணம் கொடுத்து உடலில் சினிமா நடிகர்களின் உருவங்களை பச்சை குத்துகின்றார்கள்.

நாளும் பொழுதும் தனது பிள்ளைகளுக்காக அரும் பாடுபட்ட பெற்றோர்களை மறந்து சினிமா நடிகர்களை பச்சை குத்தும் அவலம் இன்று எங்கள் மண்ணில் நடைபெறுகின்றது.

தமது வாழ்வில் மொழிகளை கடந்து, தேசங்களை கடந்து, மதங்களை கடந்து வாழ்ந்த எத்தனையோ சரித்திர நாயகர்களின் வரலாறுகள் உள்ளன அவற்றை படியுங்கள் இந்த சினிமா போலிகளை நம்பாதீர்கள்.

எந்தவொரு நடிகர்களின் சங்கங்களை எங்கள் மண்ணில் தமிழர்கள் கொண்டாடக் கூடாது. நடிகர்களுக்காக புத்தி கெட்டவர்களாக நடப்போமாக இருந்தால் எதற்கு பள்ளிக்கூடங்கள்? ஏன் ஆசிரியர்கள்? உங்களுடைய பெற்றோர்களுக்கு செய்கின்ற கைமாறு இதுவா?

எங்களுடைய வளரும் பயிர்களாக உள்ள மாணவர்கள் புனிதமாக வளர வேண்டும். தற்கால சினிமா படங்களை பார்க்கின்ற போது மிகவும் கவலையாக இருக்கின்றது.

ஏனென்றால் தரமான அறிவு நிறைந்த படைப்பாளிகளின் போற்றத்தக்க சினிமா படங்களை கடந்த காலங்களில் பார்த்த நாங்கள் தற்காலத்தில் வெளிவரும் சினிமா படங்களை பார்த்து வேதனைப்பட வேண்டியுள்ளது.

ஒரு காலத்தில் சினிமாவில் பாடல்களை நிறைந்த அறிவுடைய கவிஞர்களால் படைக்கப்பட்டது. இன்று ஆங்கிலச் சொற்களை பயன்படுத்துவதும் தமிழ் மொழியை அசிங்கப்படுத்துவம் சினிமாவில் மலிந்து போயுள்ளது.

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அழியாத காவியங்களை முன்னைய சினிமாக்களில் பல மகான்கள் எமக்காக ஏற்படுத்தி கொடுத்தார்கள்.

ஆனால் இன்று சினிமா பாடல் என்றால் ஓசை அதிகமாகிவிடுகின்றது. மேலைத்தேய வாத்தியங்கள் பாடலைத் தின்று விடுகின்றது. கருத்து அங்கே கைகழுவிப் போகின்றது. தமிழைத் தேட வேண்டியிருக்கின்றது.

தமிழ் படைப்புக்களில் தமிழ் அசிங்கப்படுத்தப்படுமேயானால் அது தமிழ் அன்னைக்கு செய்கின்ற துரோகம் ஆகும்.

ஒரு காலத்தில் என்ன அற்புதமான தமிழ் பாடல்கள் இருந்தன. என்ன அற்புதமான படைப்புக்கள் இருந்தன. இன்று அவற்றை காண முடிவதில்லை.

கவிஞர் வைரமுத்துவைப் பார்த்து ஒருவர் கேட்டார் ஆரம்பத்தில் நல்ல தமிழை தந்தீர்கள் இன்று நீங்கள் படைப்பது வானிபத்திற்காக இருக்கின்றது. அதற்கு அவர் நாங்கள் என்ன செய்ய முடியும் தயாரிப்பாளர்கள் அப்படி கேட்கின்றார்கள் என பதில் சொன்னார்.

ஒரு தமிழ் கவிஞன் அப்படி பதில் சொல்ல முடியாது.

இன்று தமிழ் படங்களுக்கு பெயர் வைப்பதற்கு கூட தமிழ் தட்டுப்பாடாக உள்ளது. கோடான கோடி தமிழர்கள் பார்க்கின்ற படங்களுக்கு தமிழ் பெயர் வைக்க மறுக்கின்றார்கள்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்து தென்னாடு என்று போற்றுகின்ற தமிழ் நாட்டில் தமிழ் படங்களுக்கு தமிழ் பெயர் இல்லை.

மகாகவி பாரதி போன்றவர்களின் படைப்புக்களை எடுத்து சினிமாக்களில் முன்பு படைத்தார்கள் சங்கீத விற்பன்னர்களை பயன்படுத்தி அருமையான படைப்புக்களை தந்தார்கள். எண்ண முடியாத அரும் பெரும் சொத்துக்கள் தமிழர்களிடையே உள்ள போதும்.

இன்று போலித்தனமான காட்சிகளை வைத்து சினிமாக்களை தயாரிக்கின்றார்கள்.

எனவே அன்பான குழந்தைகளே, இந்தப் போலியான சினிமாக்காரர்களையும் காட்சிகளையும் நம்பி அதனைப் பின்பற்றாமல் எம் மண்ணுக்கு என்ற தனித்துவத்துடன் வாழ்ந்து, எமது மண்ணுக்குப் பெருமை தேடித் தாருங்கள்.

காலங் காலமாகக் கல்விச் சூழல் உள்ளது எமது யாழ்ப்பாணம். தடக்கி விழுந்தாலும் ஒரு தமிழ் பண்டிதார் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றார் என்று கி.வ.ஜெகநாதன் யாழ்ப்பாணத்தை புகழ்ந்து பேசினார்.

மிகப்பெரிய எழுத்தாளர் டாக்கடர் மு.வரதராஜன் இலங்கை விஜயம் என்ற தனது கட்டுரையில் மூளை வளம் மிக்க நாடு வடக்கு என்று எழுதினார்.

இத்தகைய சான்றோர்கள் போற்றிய இந்த மண்ணில் ஒரு நடிகனுக்கு படம் கட்டி பால் ஊற்றி கொண்டாடும் அவலம் நடைபெறுகின்றது.

இதைப் பார்த்து வேதனை வராதா? என்ன சோதனை?

எங்களுக்கு உரிய அடையாளங்களை தெலைத்து விட்டு சினிமாவின் அடையாளங்களை பாதுகாக்கின்ற அவலம் எங்கள் மண்ணில் நடைபெறுவது வேதனை தருகின்றது.

போலித்தனமான சினிமாக்களை நம்பி இதற்கு அடிமையாகி விடாதீர்கள்.

நல்லதை வரவேற்று தீயவற்றை கைவிட்டு நல்ல சமூகமாக எங்கள் சமூகம் மாற குழந்தைகளே போலித்தனமான சினிமாக்களை கைவிடுங்கள்.- என்றார்.

# மதுரங்குளி காளி கோவிலில் சிலைகள், உண்டியல் திருட்டு!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் , மதுரங்குளி, வேலாசிய வீதியில் ஜோசப்வத்தை பகுதியில் அமைந்துள்ள காளி கோவிலில் இருந்த பித்தளைச் சிலைகள் மற்றும் திரிசூலம் உட்பட அங்கு வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பன திருட்டுப் போயுள்ளன என்று மதுரங்குளி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜோசப்வத்தை பகுதி மக்களால் நீண்ட பராமரிக்கப்பட்டு வந்த இந்தக் காளி கோவிலில் இருந்த சுமார் இரண்டு அடி உயரமுள்ள இரண்டு சிலைகள்



தரையில் வீசப்பட்டு உடைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், தரையில் வீசப்பட்டு உடைக்கப்பட்ட காளி சிலைகளுக்கு அருகில் இருந்த பித்தளையால் செய்யப்பட்ட திரிசூலம், பித்தளை காளி சிலைகள் மற்றும் உண்டியல் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சமூக சேவைச் செயற்பாடுகள் முன்னெடுப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

செனரோ மோட்டர்ஸ் நிறுவனம் சமூகத்துடன் இணைந்து பலவிதமான சமூக சேவை மற்றும் கல்வி முன்னேற்ற செயற்பாடுகளில் தற்போது காற்பதித்துள்ளது.

செனரோ மோட்டர்ஸ் நிறுவனம் ,தன் முதற்கட்டமாக கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோஸ்தர்களின் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகள் பாராட்டி கௌரவித்துள்ளது. அவர்களின் எதிர்கால உயர்கல்வி தேவைக்காக இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்பு கணக்கான கெகுலு சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பித்து வைத்துள்ளது.

யக்கலையில் இடம்பெற்ற ,ந்த நிகழ்வில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பிரதம அதிதியாகவும், இலங்கை வங்கியின் பிரதான முதலீட்டு அதிகாரி சமீர லியனகே கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் பிரதேச முதியோருக்கு உதவி

(எம்.ஏ.றமீஸ்)

சிறுவர் மகளிர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வரும் முதியோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வயோதிபர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொருள்கள் சட்டத்தரணி எம்.ஐ.பிர்னாஸ் தலைமையில் பொத்துவில் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 28 சிரேஷ்ட பிரஜைகளுக்கு இவை வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள வயோதிப நோயாளிகள், நீண்ட காலம் படுக்கையில் உள்ள முதியோர்கள், வருமானமற்ற சிரேஷ்ட பிரஜைகள் போன்றோர் தெரிவு செய்யப்பட்டு இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.



இதன்போது தெரிவு செய்யப்பட்ட முதியோர்களுக்கென கட்டில், மெத்தைகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் எம்.இராமக்குட்டி, முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் இசட்.பர்ஸான், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.ஏ.சனூசியா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# பொலிவேரியன் கிராம பாலத்தைத் திருத்துக!

(அஸ்ஹர் ஆதம் )

சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்துக்குச் செல்ல அதிகமாக மக்களால் பயன்படுத்தப்படும் பாலம் பழுதடைந்துள்ளது.

நீண்ட காலத்துக்கு முன்னர் அப்போதைய அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலம் இப்போது பழுதடைந்துள்ளது.

சிதைவடைந்துள்ள இந்தப் பாலத்தை மீள் புனர்நிர்மாணம் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# இயற்கை முறை வீட்டுத்தோட்ட செயலமர்வு சம்மாந்துறையில்

(நூருல் ஹுதா உமர் )

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 78 மாணவர்களுக்கு ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு நடத்தப்பட்டது.

நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலையத்தின் நிதியனுசரணையில் இது நடத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.தயாகரன், பிரதி அதிபர் என்.சசிகரன் ஆகியோரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எம். முபாரக் அலி மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமதயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ரிப்கான், கிழக்கு சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் தலைவரும்,சிவநெறி அறப்பணி மன்றத்தின் தலைவருமான சைவப் புலவர் கஜேந்திரா, சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் உதவிச் செயலாளர் சனாதனன், சம்மாந்துறை இளைஞர் சேவை அதிகாரி எம். எம். சமீர், அட்டாளைச்சேனை இளைஞர் சம்மேளனத் தின் செயலாளர் சகரான், சம்மாந்துறை எச்.என்.வீ வங்கியின் நுன் நிதி முகா மையாளர் சஞ்ஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் போது மண் பண்படுத்தல், விதைகள் நடுகை, வினைத்திறனான நீர்ப்பாசனம், வீட்டுத் தோட்ட முகாமைத்துவம், பீடைக்கட்டுப்பாடு முறைகள், நிலைபேறான வீட்டுத் தோட்ட முயற்சியாண்மை போன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்குச் செயன்முறையாகக் காட்டப்பட்டன.







# கல்லடி மின்சாரசபை ஊழியர்கள் குருதிக்கொடை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் மட்டக்களப்பு கல்லடி மின்சாரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை (23) அலுவலகத்தில் வைத்துக் குருதிக்கொடை வழங்கினர். இதன்போது 75 ,ற்கும் மேற்பட்டோர் “உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்” என்னும் தொனிப் பொருளுக்கு அமைய இரத்த தானம் செய்தனர்.

இவர்களிடம் இருந்து குருதியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பெற்றுக் கொண்டனர்.

இங்கு குருதிக்கொடை வழங்கியவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# கிழக்குப் பல்கலைக்கழக ஐந்தாவது ஆய்வு மாநாடு!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஐந்தாவது ஆய்வு மாநாடு கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டின் ஆதார சுருதி உரையை கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், இலங்கை தொழிநுட்ப தகவல் நிறுவனத்தின் சட்டக் கல்லூரியில் தற்பொழுது பேராசிரியராகப் பணிபுரிபவருமான பேராசிரியர் நா. செல்வக்குமாரன் நிகழ்த்தியிருந்தார்.

ஐந்தாவது வருடாந்த மாநாட்டின் இணைப்பாளராக நுண்கலைத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் சு.சந்திரகுமார் செயற்பட்டார்.



ஆரம்ப நிகழ்வில் பல்கலைக் கழகத்தின் பீடாதிபதிகள், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர், நூலகர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆய்வரங்கு ஆங்கிலக் கற்கைத் துறையின் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

ஆய்வரங்கின் கருப்பொருள் "பன்மைத்துவ சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமநீதி" என்பதாகும்.

இதற்கமைய பல ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து அவர்களது ஆய்வு அறிக்கைகளை வெவ்வேறு தளங்களில் முன்மொழிந்தனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் 51 பேர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

அண்மையில் பட்டம் பெற்ற மாணவர்கள் ஆய்வாளர்களாகச் செயற்பட்டு, அவர்களது புதிய கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பித்து உரையாடலுக்கு உட்படுத்தினர். ஆய்வரங்கில் அதிகளவான பேராசிரியர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் தமது கருத்தாக்கங்களை முன்நிறுத்தி உரையாடினர்.






# காத்தான்குடி மத்தியின் பரிசளிப்பு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா வியாழக்கிழமை கல்லூரி ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது கடந்த 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை பாடசாலையில் பல்வேறு சாதனைகளை அடைந்த மாணவர்கள், சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்கள், சிறந்த அடைவு மட்டங்களை பெற்ற மாணவர்கள் இதன் போது பாராட்டி நினைவுச் சின் னங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் மற்றும் பிரதி அதிபர் ஆசிரியர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்த பரிசளிப்பு விழா கல்லூரின் அதிபர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.






# கல்முனையில் பாராட்டு வைபவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் ஆரம்ப பிரிவு வகுப்பறைகளுக்கு இடையில்கல்முனை கல்வி வலயம் நடத்திய வகுப்பறை கவின்கலை போட்டியில் வெற்றி பெற்ற வகுப்பாசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் சீ.எம். நஜிப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக டாக்டர் சைபுல்லா யூசுப் லெப்பை கலந்துகொண்டார்.





# சாய்ந்தமருது நன்னீர் மீனவர்கள் ஆற்றுவாழைகளால் சிரமம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவோர் ஆற்றுவாழையின் அதீத வளர்ச்சியால் மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலையில் தமது ஜீவனோபாயத்தை இழந்து வருகின்றனர்.

தற்போது சாய்ந்தமருது பிரதேசத்தில் மழை பெய்வதால் ஆறுகளில் நீரின் மட்டம் உயர்ந்துள்ளது. அதிகளவில் நன்னீர் மீன்பிடியாளர்கள் பயனடைந்து வரும் நிலையில் ஆறுகளிலும் குளங்களிலும் நீர்களைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் தமது வள்ளங்களையும், தோணிகளையும் செலுத்தி ஆழமான பகுதிகளில் வலை வீசி மீன் பிடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்.

மழை காலங்களில் ஆற்று மீனுக்கு அதிக கிராக்கியுள்ளதால் அந்த நேரத்தில்தான் வருமானம் அதிகம் கிடைக்கும். ஆற்று வாழையின் ஆதிக்கத்தால் மீன் பிடியில் கிடைக்கும் வருமானத்தை இழந்துள்ளனர் என்று அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

# சினேகபூர்வ சந்திப்பு நிகழ்வு

(சப்னா றிபாஸ்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அட்டாளைச்சேனை கிளை ஏற்பாடு செய்த பிரமுகர்களுடனான 'சினேகபூர்வ சந்திப்பு' நிகழ்வு அட்டாளைச்சேனை கடற்கரை கட்டில் நேற்று (26) நடைபெற்றது.

அட்டாளைச்சேனைக் கிளைத் தலைவரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எம். நியாஸி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி முன்னாள் அதிபர் மௌலவி ஏ.சி. முகம்மது பாகவி, அக்கரைப்பற்று அபுபக்ர் சித்தீக் இஸ்லாமியக் கல்லூரி அதிபர் அஷ்–ஷைய்க் எம்.எம். கலாமுல்லாஹ் (ரஷாதி) ஆகியோர் உலமாக்களுக்கும், சமூகத்துக்கும் இடையிலான நெருக்கம், தொடர்பு, இன்றைய நிலை, எதிர்கால இலக்கு என்பன குறித்து உரையாற்றினார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் அஷ்–ஷைய்க் என்.ரி.நஸீர் (ஹாமி) எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் குறித்து விளக்கம ளித்தார்.

இதன்போது பங்குபற்றுனர்களின் கருத்துக்கள், ஆலோசனைகளும் பெறப்பட்டன.

உலமாக்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், கல்வியியலாளர்கள், பிரதேச முக்கியஸ்த்தர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அட்டாளைச்சேனை கிளை நிர்வாகிகளின் அறிமுகமும் இடம்பெற்றது.



# கல்முனை மாநகர சபை அசமந்தம் பொலிவேரியனில் ஆபத்தில் மக்கள்




(நூருல் ஹுதா உமர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பின்னர் மஹிந்த அரசால் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக்கள் நான்கு ஜனாதிபதிகளை மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்தித்தும் இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்பட வில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன. தரமற்ற அபிவிருத்திகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுவதையும்கின்றன. பலதடவைகள் அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பதால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவுமின்றனர்.

அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் மற்றும் பல மாதங்கள் கடந்தும் வீதி அபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிகற்களும் இன்னும் செயலுருவம் பெறவில்லை.

வடிகான்கள் நீர் வடிந்தோட முடியாத அளவுக்கு மண்ணால் அடைபட்டு உள்ளது.

டெங்கு உட்படப் பல்வேறு நோய்களை உண்டாக்கும் தன்மை கொண்ட கொள்கலன்கள் வடிகான்களில் வீசப்பட்டும் காணப்படுகின்றன.

வடிகான்களுக்குப் பொருத்தமான மூடிகள் இடப்படாமையால் சிறுவர்கள் அடிக்கடி விபத்துக்களை சந்திப்பதுடன் பெரியோர்களும் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பில் கல்முனை மாநகர சபையின் பிரதேசத்திதுக்குப் பொறுப்பான அதிகாரிகளும் அசமந்தபோக்குடன் செயற்படுகின்றனர் என்று மக்கள் குற்றம் சாட்டுகின்றனர் உரிய அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர்.




# மட்டு. மேற்கு வலய மாணவர் கௌரவிப்பு!

(பழுவூரான்)

அறிவாலயம் அறக்கட்டளையால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 208 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

,ந்த நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை (25) முனைக்காடு உக்டா பண்ணையில் இடம் பெற்றது.

அறிவாலயம் அறக்கட்டளையின் ஸ்தாபகர் அலையப்போடி நல்லரத்தினத்தின் ஒழுங்குபடுத்தலில் சி.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஒவ்வொரு மாணவருக்கும் ஐயாயிரம் ரூபா வீதம் வங்கிக் கணக்கில் இடப்பட்டு வங்கி கணக்குப் புத்தகம் வழங்கப்பட்டது.

இதன் போது டி.எஃப். சி.சி வங்கியால் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் மாவட்ட மட்டத்தில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

அறிவாலயம் அறக்கட்டளை அமைப்பானது கடந்த 10 வருடங்களாக இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது. மொத்தமாக 10 லட்சத்து 40 ஆயிரம் ரூபா மாணவர்களுக்குப் பரிசாக வழங் கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோ. ஜெயச்சந்திரன், வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், சி. யோகேஸ்வரன், பாடசாலை அதிபர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.






# கேம்பிறிட்ச் சர்வதேச பாடசாலை ஒன்று கூடலும் பரிசளிப்பும்

(ஹஸ்பர்)

திருகோணமலையில் அமைந்துள்ள கேம்பிறிட்ச் சர்வதேச பாடசாலையின் 2023 ஃ 2024 ஆம் ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக் கிழமை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் மண் டபத்தில் கேம்பிறிட்ச் சர்வதேச பாட சாலையின் அதிபர் தலைமையில் இடம் பெற்றன.

நிகழ்வின் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோகன கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக ஜோர்தான் நாட்டுக்கான இலங்கையின் முன்னாள் தூதர் சட்டத்தரணி ஏ.எல்.எம்.லாபிர், திருகோணமலை கடற்படை கல்லூ ரியின் கொமான்டர் கொரா ரதோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக திருகோண மலை பொது வைத்திய சாலையின் சிரேஸ்ட வைத்திய அதிகாரி இளங் கோவன் செந்தூரன், வணக்கத்துக்குரிய எஸ்.டபிள்யூ தேவகுமார் , நிலாவெளி வைத்திய சாலையின் வைத்தியர் மேகலா அருன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காசநோய் விழிப்புணர்வு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.ஐ.எல். எம்.றிபாஸ் ஆலோசனையின் பேரில் கல்முனை அஸ்றப் ஞாபகார்த்த வைத் தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்களுக்கு காச நோய் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

செயற்பாட்டிலுள்ள மற்றும் மறைந்திருக்கும் காச நோய் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நிகழ்வு இடம்பெற்றது.



டாக்டர் ஏ.எல்.ஏ.கபூர், டாக்டர். ஏ. எச்.எம்.மபாஸ் ஆகியோர் வளவாளர் களாக கலந்து கொண்ட நிகழ்வில் கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# திருக்கார்த்திகையை முன்னிட்டு நேற்று விசேட பூரணை யாகம்!

( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு காரைதீவு ஸ்ரீசித்தானைக் குட்டி சுவாமி ஆலயத்தில் விசேட பூசை யும் பூரணை மகாயாகமும் நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றன. முன்னதாக கோமாதா பூஜை இடம் பெற்றது.

திருக்கார்த்திகையை ஒட்டி 210 சித்தர்களை எழுந்தருளச் செய்யும் விசேட பௌர்ணமி மகா யாகம் சிறப்பாக நடைபெற்றது. நூற்றுக் கணக்கான பக்தர்கள் மத்தியில் இடம்பெற்றயா கத்தை தொடர்ந்து விசேட பூசை இடம் பெற்றது. இறுதியில் அன்னதானமும் நடைபெற்றது.



# நீட் விலக்கு நிறைவேறியே தீரும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என ஆணவத்தோடு எந்தப் பதவியில் இருப்பவர்கள் சொன்னாலும், நீட் விலக்கு மக்களின் பேராதரவுடன் நிறைவேறியே தீரும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நவீன மருத்துவம் தொடர்பாக சமூக சமத்துவத்துக்கான வைத்தியர்கள் சங்கத்தின் தமிழ்நாடு மாநில 4 ஆவது மாநாடு, 20 ஆம் ஆண்டு தொடக்க விழா மற்றும் கருத்தரங்கம் சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,




"நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என ஆணவத்தோடுஎந்தப் பதவியில் இருப்பவர்கள் சொன்னாலும், நீட் விலக்கு மக்களின் பேராதரவுடன் நிறைவேறியே தீரும். இதையடுத்து தற்போதுஅடுத்த ஆபத்தாக நெக்ஸ்ட்தேர்வு உள்ளே நுழைகிறது.

மாநில உரிமைகளையும், மருத்துவக் கட்டமைப்பையும் சிதைக்கும் மத்திய பாஜகவின் நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டம் மருத்துவர்களுடையது மட்டுமல்ல. தமிழகத்தின் மாநில உரிமைக்கானது.

இந்த போராட்டத்தில் எப்போதும் தமிழக அரசு துணைநிற்கும். மருத்துவக் கட்டமைப்பையே நோயாளி ஆக்கியவர்களிடம் இருந்து மருத்துவத் துறையையும், நாட்டையும் மீட்க இன்னும் 6 மாதம் தேவையாக இருக்கிறது. வெற்றிகரமான சிகிச்சையை நிச்சயமாக இந்திய மக்கள் அளிப்பார்கள்." என்று தெரிவித்தார்.

# இண்டியா கூட்டணியை உடைக்கும் வேலையை ஸ்டாலின் செய்கின்றார்!

## - மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் விமர்சனம்



'நாங்கள் கைகாட்டுபவர்கள்தான் பிரதமர் ஆக முடியும்' என்று கூறியதன் மூலம், இண்டியா கூட்டணியை உடைக்கும் வேலையை முதல்வர் ஸ்டாலின் செய்கின்றார்."

– இவ்வாறு மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் விமர்சித்துள்ளார்,

சென்னையில் செய்தியாளர்களிடம் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கருத்து தெரிவிக்கையில்,

சென்னையில் இடம்பெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "நாங்கள் கை காட்டுபவர்கள்தான் பிரதமர் ஆக முடியும்" என்று கூறியுள்ளார். இண்டியா கூட்டணியில் இருந்துகொண்டே அவர் இவ்வாறு கூறினால், அந்த கூட்டணிக்கு தலைமை வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தியை அவர் பிரதமராக ஏற்கவில்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது. இண்டியா கூட்டணி எப்போது வேண்டுமானாலும் உடையும் என்று ஏற்கெனவே கூறியுள்ளோம். கூட்டணியை உடைக்கும் வேலையை முதல்வர் ஸ்டாலின் செய்திருக்கிறார்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க. சிறப்பான வெற்றியை பெறும்.

சென்னையில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை திறக்கப்படுவது வரவேற்கத்தக்கது. மண்டல் கமிஷன் அறிக்கை எவ்வாறு ஓபிசிமக்களுக்கு பயனுள்ளதாக இருந்ததோ, அதேபோல, இன்று பிஹார் அரசு தானாக முன்வந்து சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தி உள்ளது. அவர்கள் செய்யும்போது, அதை ஏன் தமிழக அரசு செய்ய கூடாது. சமூக நீதி என்பதற்கு அர்த்தம் கண்டுபிடித்ததே திமுகதான் என்பதுபோல வெற்று பேச்சுகளை பேசாமல், ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபட வேண்டும். பிஹார் போல, தமிழகத்திலும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும்." – என்றார்.

# திருப்பதி தரிசனத்துக்கு சென்றார் பிரதமர் மோடி

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு நேற்று திருப்பதிக்கு சென்றுள்ளார்.

ரேணிகுண்டா விமான நிலையத்துக்கு நேற்று சென்ற பிரதமரை ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி, ஆளுநர் அப்துல் நசீர் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் திருமலை சென்றடைந்த பிரதமர், ரச்சனா விருந்தினர் மாளிகைக்கு சென்றபோது, திருமலை திருப்பதி தேவஸ்தான செயல் அதிகாரி ஏ.வி.தர்ம ரெட்டி மற்றும் பிற அதிகாரிகள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



நேற்று இரவு திருமலையில் தங்கிய நரேந்திர மோடி, இன்று காலை உலகப் புகழ்பெற்ற திருப்பதி கோவிலில் வெங்கடேசப் பெருமானுக்கு தரிசனம் செய்தார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி திருமலை கோயிலுக்குச் செல்வது இது நான்காவது முறையாகும்.

இதற்கிடையில், பிரதமரின் வருகையை முன்னிட்டு திருமலை மற்றும் திருப்பதி ஆகிய இரண்டு யாத்ரீக நகரங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# போர் நிறுத்தத்திற்கு மத்தியிலும் நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்!

## - பாலஸ்தீனியர்களின் பலி எண்ணிக்கை அதிகரிப்பு

கடந்த 24 மணி நேரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் படைகளால் 8 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் மூன்றாவது நாளை எட்டியுள்ள நிலையில், 13 இஸ்ரேலிய பணயக் கைதிகள், மூன்று தாய்லாந்து பிரஜைகள் மற்றும் ஒரு ரஷ்யர் ஆகியோர் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் சிறையில் கடந்த 8 ஆண்டுகளாக வாடும் 39 பாலஸ்தீனியர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் ஒப்படைப்பு என ஹமாஸ் படைகள் செயற்பட்டு நிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் படைகளால் 8



பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி ஜெனின் நகரில் ஒரே இரவில் இஸ்ரேலிய படைகள் முன்னெடுத்த தாக்குதல் சம்பவத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒகஸ்ட் மாதம் இரண்டு இஸ்ரேலியர்களைக் கொன்ற விவகாரத்தில் சந்தேகிக்கப்படும் பாலஸ்தீனியர் ஒருவரைப் பிடிப்பதற்காக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என இஸ்ரேலிய இராணுவம் விளக்கமளித்துள்ளது.

# கனடாவில் துப்பாக்கிச்சூடு: மூவர் பலி



கனடாவின் வின்னிபெக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் மேலும் இரண்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் தாம் சம்பவ இடத்திற்கு விரைந்த போது ஐந்து பேர் துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் கீழே விழுந்திருந்ததை அவதானித்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் ஏனைய மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயம் அடைந்தவர்களுக்கு இடையிலான உறவு தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பதுடன், தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மலேசியாவுக்குள் பிரவேசிப்பதற்கு இலவச விசா!

சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பிரஜைகள் மலேசியாவுக்குள் பிரவேசிப்பதற்கு இலவச விசா வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலவச விசா அனுமதி வழங்கப்படும் என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த இலவச விசா அனுமதி எவ்வளவு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்படவில்லை.

மலேசிய அரசாங்க தகவல்களின் படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜுன் மாத காலப்பகுதியில் மலேசியா 9.16 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை பதிவு செய்துள்ளது.

அவர்களில் சீனாவிலிருந்து 4 லட்சத்து 98 ஆயிரத்து 540 பேரும், இந்தியாவில் இருந்து 2 லட்சத்து 83 ஆயிரத்து 885 பேரும் அடங்குகின்றனர்.